கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025–ம் வருடம் ஆகஸ்டு மாதம் 18ம் தேதி திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.9/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.10/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.11/2025
இன்
அசல் வழக்கு எண்.226/2018
* * * *

முத்து ... மனுதாரர்/வாதி

/எதிர்/

பாண்டி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இறுதியாக இம்மனு 18.08.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாக்கியராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை

இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re-open செய்யவும், மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஐ மீண்டும் recall செய்ய வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழும், மனுதாரர்/வாதி தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் ஆவணத்தை வழக்கு கோப்பில் சேர்க்க அனுமதிக்க வேண்டி கட்டளை 7 விதி 14(3)ன் கீழும் இந்த மூன்று மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

மேற்படி மனுதாரர்/வாதியின் இந்த மூன்று இடைநிலை மனுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

1.1) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட I.A.No.9/2025

மனுவானது வாதி முடிக்கப்பட்ட சாட்சியினை மீண்டும் re–open செய்யவேண்டும் என்றும், I.A.No.10/2025 ஆனது மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஐ மீண்டும் Re–call செய்து அதன்மூலம் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் ஆவணத்தினை வழக்கு கோப்பில் சேர்க்கவேண்டும் என்றும் I.A.No.21/2025 ஆனது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்/ வாதியின் இம்மனுக்களை அனுமதிக்ககூடாது என்று ஆட்சேபனை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

**2) தீர்வு:–**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2.1) பொதுவாக, மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்கள் வழக்கிற்கு தேவையான மற்றும் சட்டப்படியான ஆவணங்களாக இருப்பின் அவற்றை வழக்கு கோப்பில் சேர்ப்பது சட்டப்படியானதாகும்.

2.2) அசல் வழக்கானது இருதரப்பு விசாரணையும் முடிக்கப்பட்டு,

வாதுரைக்காக நிலுவையில் உள்ள நிலையில், இந்த மூன்று இடைநிலை மனுக்களும் மனுதாரர்/வாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) மனுதாரர்/வாதி தரப்பு மனுவில், தாவாச்சொத்து சம்பந்தப்பட்ட முக்கியமான ஆவணமானது வாதி தரப்பில் தாக்கல் செய்யவேண்டியுள்ளது என்றும், மனுதாரர்/வாதி தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்தபோது 06.09.2007ம் தேதியிட்ட மேற்படி பாக விடுதலை ஆவணமானது மனுதாரர்/வாதி தரப்பு ஆவணமாக குறியீடு செய்வதற்கு வாதியின் கைவசம் இல்லாத காரணத்தால் திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து ஆவணம் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிவிட்டது என்றும், மேற்படி பாக விடுதலை ஆவணமான அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணமாக உள்ளது என்றும் எனவே, மேற்படி ஆவணத்தினை மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு கோப்பில் சேர்க்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.4) மேலும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணமானது என்ன காரணத்திற்காக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படுகிறது என்று எந்தவொரு விளக்கமும் கூறப்படவில்லை

என்றும், மேற்படி ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் எனவே மனுதாரர்/வாதியின் மனுவினை அனுமதிக்ககூடாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது.

2.4) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுக்களை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில், மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கின் சொத்து விபரமானது **செங்குளம் நத்தம் சர்வே எண்.71/2 நம்பரில் கட்டுப்பட்டது என்றும், நகர அளவையின்படி வார்டு A பிளாட் 6 நகரப்புல எண்.3/2 நம்பரில் கட்டுப்பட்டது** என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணத்தின் சொத்து விபரமானது **செங்குளம் கிராமம் அயன் நஞ்சை சர்வே 70/3க்கு தற்போதைய புதிய நஞ்சை சர்வே 2/3ல் உள்ள செண்டு 36ல் ஏற்கனவே கிரையம் செய்தது** என்று கூறப்பட்டுள்ளது.

2.5) எனவே, மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது மனுதாரர்/வாதியின் வழக்கினை நிரூபணம் செய்யும்பொருட்டு தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டும், மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல்

செய்யப்பட்ட ஆவணமானது சார்பதிவாளர் சான்றிட்ட நகலாகவும் இருப்பதை கருத்தில்கொண்டும், மேற்படி ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்வதால் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு காரணியாக அமையுமே தவிர, இம்மனுவினை அனுமதிப்பதினால் தரப்பினர்கள் யாருக்கும் எவ்வித சாதக பாதகமும் இருக்காது என்பதை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மூன்று மனுக்களையும் அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.18 17:42:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

**<u>1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**<u>2. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**<u>4. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.18 17:42:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.9/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.10/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.11/2025
இன்
அசல் வழக்கு எண்.226/2018
வரைவு/செவ்வை பொதுவான உத்தரவு
நாள்: 18.08.2025